தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 26, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 மே 9, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு."

குற்றமற்றவனாகவும், குடிமக்களின் நலத்திற்குப் பாடுபடுபவனாகவும் இருப்பவனைத் தமது உறவினனாகக் கருதி, மக்கள் சூழ்ந்துகொள்வார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 242, பின்னர் எடுத்துக்கொள்ளப்பெறும்.*

வினா வரிசை எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

243—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***14314—திரு. கே.ஆர். ஜெயராம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2022 மே 9

(அ) சிங்காநல்லூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதி அமைந்துள்ள கோயம்புத்தூர் மாவட்டத்தில் தற்பொழுது 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 7 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 58 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ, மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதியில் புதியதாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கோவை மாநகராட்சியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், ஓர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் மட்டுமே உள்ளன. இங்கு பயிலும் ஆயிரக்கணக்கான ஏழையெளிய பள்ளி மாணவர்களுக்கு இது போதுமானதாக இல்லை. சிங்காநல்லூர் தொகுதியில் பல்லாயிரக்கணக்கான பஞ்சாலைத் தொழிலாளர்களும், ஆயிரக்கணக்கான குறு சிறு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் வசித்து வருகின்றனர். இவர்களின் குழந்தைகள் பள்ளிப் படிப்பினை முடித்த பின்னர் தனியார் கல்லூரிகளைச் சார்ந்திருக்கக்கூடிய நிலையே உள்ளது. தனியார் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் அதிகமாக உள்ளதால் அவர்கள் மேற்படிப்பினைத் தொடர முடிவதில்லை. எனவே, ஏழையெளிய தொழிலாளர்களின் குடும்பப் பொருளாதார சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, சிங்காநல்லூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2022 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் 59,500 மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால், அங்கு சேர்ந்திருக்கிற மாணவர்கள் 36,450 பேர்தான். மீதமுள்ள 23,050 இடங்கள் காலியாக உள்ளன. இது அந்த மாவட்டத்திலே இருக்கிற நிலைமை. மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியில் மட்டும் 7,633 பேருக்கு கல்லூரியில் சேர்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன; சேர்ந்திருக்கிற மாணவர்கள் 4,022 பேர்தான். அதில் 3,611 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆக, முதலில் உங்களுடைய முயற்சியை மேற்கொண்டு, காலியாக இருக்கிற அந்த இடங்களிலே மாணவர்கள் சேர்வதற்கான வாய்ப்புகளை நீங்கள் உருவாக்கித் தாருங்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதை நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். அரசுக் கல்லூரிகளோ, அரசு உதவிபெறும் கல்லூரிகளோ இல்லாத, தேவையிருக்கிற பகுதிகளில் முன்னுரிமை கொடுத்து இந்த அரசு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 7 அரசு உதவிபெறும் கலை கல்லூரிகளும் கோவை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ளன. இவற்றில் 2 அரசு உதவி பெறும் கலை கல்லூரிகள் மட்டுமே சிங்காநல்லூர் தொகுதியில் அமைந்துள்ளன. சிங்காநல்லூர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இல்லை. சிங்காநல்லூர் தொகுதியில் உள்ள மாணவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று கல்வி பயிலும் சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், கல்லூரிகள் வேண்டுமென்று மாமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கெல்லாம், அப்பகுதியில் இயங்கி வரும் அரசு கல்லூரிகள் உட்பட, அரசு உதவிபெறும் கல்லூரிகள், சுயநிதிக் கல்லூரிகளில் நிரப்பப்படாமல் இருக்கும் காலியிடங்களின் விவரங்களைக் கூறி வருகின்றார். ஆனால், எந்தவொரு அரசு கலை கல்லூரியிலும் காலியிடங்கள்*

இருப்பதில்லை. தனியார் கல்லூரிகளில் கட்டணம் செலுத்திப் படிக்கும் வாய்ப்புகள் இல்லாத, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய ஏழையெளிய மாணவர்கள் மட்டுமே அரசுக் கல்லூரிகளைத் தேர்வு செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, கடந்த ஆண்டு கோவை அரசு கலைக் கல்லூரியில் 15,000–க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டு, சுமார் 1,650 பேருக்கு மட்டுமே இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சென்னை மாநகராட்சிக்கு அடுத்தபடியாக மக்கள் தொகையில் பெரிய மாநகராட்சியாகவும் அரசுத் துறைகளில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய மாநகராட்சியாகவும் கோவை இருப்பதால் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலிருந்து மக்கள் இங்கே இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். கடந்த காலங்களில் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு என்ன வேண்டும்? மாண்புமிகு அமைச்சர் மிகவும் தெளிவான பதிலைத் தந்திருக்கிறார். அரசுக் கல்லூரிகள், அரசு உதவிபெறும் கல்லூரிகள் இல்லாத சட்டமன்றத் தொகுதிகளில் கல்லூரிகள் தருகிறேன் என்று சொல்லிவிட்டார். உங்களுக்கு என்ன வேண்டும்?

திரு. கே.ஆர். ஜெயராம்: கடந்த காலங்களிலே எடப்பாடியார் அவர்கள் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற வகையிலே அந்த அரசு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் கேட்பது, அமைச்சரின் பதிலைத் தெரிந்துகொண்டீர்கள். உங்கள் தொகுதியில் அப்படி இல்லையென்றால் கேளுங்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: இந்த அரசு, தொகுதிக்கு ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதையும், எனது சட்டமன்றத் தொகுதிக்கும் அமைத்துத் தருமா என்பதையும் எனது தொகுதி மக்களின் சார்பாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

2022 மே 9]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்லூரிகளிலே இடம் காலியாக இல்லை என்று சொன்னார். கோவை மாவட்டத்தில் இருக்கின்ற 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே 973 இடங்கள் இன்னும் காலியாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல, உங்கள் தொகுதியிலிருந்து நீண்ட தூரம் செல்ல வேண்டுமென்று சொல்கிறீர்கள். இல்லை, சிங்காநல்லூரிலிருந்து புளியக்குளம் 4.5 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. அங்கு, ஒரு மகளிர் அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. அதேமாதிரி, அங்கிருந்து கோயம்புத்தூர் அரசு கலைக் கல்லூரி 7.5 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கிறது. ஆகவே, இந்த அளவுக்கு நெருக்கமாக, பக்கத்திலேயே கல்லூரிகள் இருக்கின்ற தொகுதி, உங்கள் சிங்காநல்லூர் தொகுதி. மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்கேயும் கல்லூரிகள் இல்லாத பகுதிகளுக்கு, அதாவது 20 கிலோ மீட்டர், 25 கிலோ மீட்டர் தூரம் சென்று படிக்கின்ற மாணவர்கள் இருக்கின்ற பகுதிகளிலே இதைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பற்றி இங்கே இருக்கின்ற எல்லோருக்கும் தெரியும். கல்வியைப் பொறுத்தவரை, கன்னியாகுமரிக்கு அடுத்தது கோவையில்தான் அதிகம் படிக்கின்ற மாணவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே, சிங்காநல்லூர் தொகுதிக்குத் தேவை ஏற்படுகிறபோது இந்த அரசு பரிசீலிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. கா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். பட்டுக்கோட்டை தொகுதியிலே அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றுகூட இல்லை. நம்முடைய அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை தந்து, வருகின்ற நிதியாண்டிலே பட்டுக்கோட்டையில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். நடைபெற்ற உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையில்கூட அந்தக் கோரிக்கையை நான் முன் வைத்துள்ளேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்ன மாதிரி அனைத்துத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கேள்வியைக் கேட்கிறார்கள். இந்தக் கேள்வியைக் கேட்காதவர்கள் கிடையாது. நிறைய பேர் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நான் எல்லோருக்கும் சொல்கின்ற பதில் இதுதான். அந்தத் தொகுதியிலே உண்மையிலேயே கல்லூரிகளுக்குத் தேவை இருக்குமானால், மாணவர்கள் சேர்க்கைக்கு அங்கே வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருக்குமானால், அந்த இடங்களைப் பரிசீலித்து, கல்லூரிகளை உருவாக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். பட்டுக்கோட்டையை பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாத இடம் கிடையாது. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி 31 கல்லூரிகளை இந்த ஓர் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் மூலமாக 10 கல்லூரிகள், உயர் கல்வித் துறையின் மூலமாக 20 கல்லூரிகள், கூட்டுறவுத் துறையின் மூலமாக 1 கல்லூரி என மொத்தம் 31 கல்லூரிகளை ஒரே ஆண்டில் வழங்கிய, ஒரே முதலமைச்சர், இந்தியாவிலேயே நம்முடைய தலைவர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், வருகின்ற காலங்களிலே வாய்ப்புகள் வருகின்றபோது பரிசீலிக்கப்படும். அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களாகிய உங்கள்மீதும் நான், தவறு சொல்லக் கூடாது என்று நினைக்கிறேன். கேட்க வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது. பதிலைச் சொல்ல வேண்டிய பொறுப்பும் எனக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்தப் பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார் அவர்கள். எல்லோருக்கும் பதில் சொல்லியாகிவிட்டது. நானும் கேட்டேன் என்பதற்குக் கேட்டுவிடுங்கள்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தென்காசி தொகுதிக்குட்பட்ட சுரண்டை நகராட்சியில் உள்ள காமராஜர் அரசு கலைக் கல்லூரி 2007 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் துவக்கப்பட்டது. அந்தக் கல்லூரியின் நுழைவாயிலிலிருந்து உள்ளே செல்வதற்கு, சுமார் 1.6 கிலோ மீட்டர்

2022 மே 9]

தூரம் உள்ள சாலை கல்லூரி துவங்கும்போது போடப்பட்டது. அந்தச் சாலை குண்டும் குழியுமாக மிக மோசமான நிலையில் உள்ளது. இந்த 1.6 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலை, மோசமான நிலையில் இருப்பதால், மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களைக் கல்லூரி வளாகத்தின் நுழைவாயிலிலேயே அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இறக்கிவிடுவதால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சாலை வசதியை செய்து தருவீர்களா என்று கேட்கின்றீர்கள். அப்படித்தானே?*

திரு. S. பழனி நாடார்: *ஆம். (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிடுவார்கள்.*

திரு. S. பழனி நாடார்: *அங்கு சாலை வசதியை செய்து தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை வசதி சரியில்லை, அதனால் சிரமப்படுகிறார்கள் என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். சாலை வசதிகளை நாங்கள் செய்ய முடியாது. அதை நீங்கள், தென்காசி நகராட்சியில் சொல்லி, அந்தச் சாலையைப் போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். அதனால் நிச்சயமாக மாணவர்கள் பயனடைவார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பல்வேறு அரசு கலைக் கல்லூரிகளிலே காலியிடங்கள் அதிக அளவிலே இருக்கின்றன என்று சொன்னார்கள். தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை அரசு கலைக் கல்லூரிகளில் அப்படி உள்ள காலியிடங்களுக்காகத்*

தனியாக counselling நடத்தி, அதிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனென்றால், பல மாணவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடிய நிலை இருக்கிறது. என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதி என்பது கிராமங்கள் நிறைந்த தொகுதியாகும். அந்தத் தொகுதியில் இப்போது எந்தவொரு அரசு கலைக் கல்லூரியும் இல்லை. குறிப்பாக, திருவண்ணாமலை கல்லூரியில் 13,000, 14,000 விண்ணப்பங்கள் வருகின்றன. ஆகவே, என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரியைத் துவக்க அரசு முன்வருமா?

திருவண்ணாமலை அரசு கல்லூரியில் புதிதாகப் பல்வேறு படிப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதற்குத் தேவையான கட்டடங்கள் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு counseling நடத்தலாமா என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேட்கிறார். அந்தக் கல்லூரிகளிலே, அந்தப் பகுதிகளில் இருக்கின்ற மாணவர்களே நேரடியாக விண்ணப்பிக்க வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. Counselling என்பது அவ்வளவு சாதாரணமான விஷயம் கிடையாது. Counselling என்றால் உடனே ஆன்லைனில் நடத்தலாம் என்று சொல்வார்கள். சென்ற ஆண்டு அண்ணா பல்கலைக்கழகத்தில் online counseling–ல் எவ்வளவு குளறுபடிகள் இருந்தன என்பதை நாம் பார்த்தோம். எனவே, அதைப் பற்றியெல்லாம் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, அண்ணா பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சேருகின்ற மாணவர்களுக்கு 10 இடங்களில் Counselling வைத்து, நேர்முகமாக அவர்களைத் தேர்ந்தெடுக்க முடியுமா என்ற ஆலோசனைகளையெல்லாம் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது. Counselling என்பது நிச்சயமாக நடைமுறைக்கு ஒவ்வாத ஒன்றாகும். எனவே, Counselling வேண்டாம். எங்கெங்கு இடம் இருக்கின்றதோ, அந்தந்த கல்லூரிகளில் அவர்கள் சேர்வதற்கு நாம் time தருகிறோம். அந்தத் தேதிக்குள் அவர்கள் சேரவில்லையென்று சொன்னாலும், அதற்குப் பிறகும் விண்ணப்பித்துச் சேரலாம்.

2022 மே 9]

ஆக, விண்ணப்பிக்காத மாணவர்கள்கூட அரசுக் கல்லூரிகளில் சேர்வதற்கான வாய்ப்புகளைக் கொடுத்திருக்கிறோம் ஆகவே, Counselling *தேவையில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, கோரிப்பாளையத்தில் உயர்மட்டச் சாலை மேம்பாலத்திற்காக, ரூ.199 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அடிக்கல் நாட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் சார்பாக, மதுரை தல்லாகுளத்தில் ஒரு கலைக் கல்லூரி இருக்கின்றது. அதை அரசு கலைக் கல்லூரியாக மாற்றினால் ஏழையெளிய மாணவர்களுக்கு உதவியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக் கலைக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகங்கள்மூலம் நடத்தப்படுகின்ற அரசு கலைக் கல்லூரிகளையெல்லாம் அரசே எடுத்து நடத்த வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட இரண்டு கல்லூரிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு கல்லூரிகளையும் நீங்கள்தான் கட்டித் தந்தீர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *ஆகவே, பல்கலைக்கழகங்கள்மூலம் நடத்தப்படுகின்ற எல்லா கல்லூரிகளையும் அரசே எடுத்து நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நிச்சயமாக, அரசே அந்தக் கல்லூரிகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2022 மே 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திசையன்விளை, பணகுடி ஆகிய கல்லூரிகளை இந்த ஆண்டே அரசே எடுத்து செயல்படுத்த வேண்டும்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த ஆண்டே, எடுத்து நடத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, நிதிநிலைக்கேற்ப அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 242, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

242—

கதவணை

***309—திரு. ம. சிந்தனை செல்வன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் அருகே ஆதிவராகநல்லூரில் வெள்ளாற்றின் குறுக்கே கதவணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், ஆதிவராகநல்லூர் கிராமம் அருகே வெள்ளாற்றின் குறுக்கே கடைமடை ஒழுங்கியம் (*Tailend Regulator*) அமைக்க, நில எடுப்பு உட்பட ரூ.96.58 கோடிக்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிவராகநல்லூர் அருகே இந்த அணை கட்டப்பட வேண்டுமென்று கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக கருத்துருக்கள்*